2002 மே 9] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2002) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்த அவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதாக இருந்த இனம் 8, உள் இனம் (2) முதல் (12) வரையிலான 11 சட்டமுன்வடிவுகள் நாளை 10-5-2002, வெள்ளிக்கிழமை எடுத்துக்கொள்ளப்பெறும். இவை தவிர, நாளைய நிகழ்ச்சிநிரலின்படி எடுத்துக்கொள்ளப்பெறும் சட்டமுன்வடிவுகளும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.